8th September 1970]

டர் பிடித்து டிக்கெட் கேட்கிற நேரத்தில் அவர்கள் தாக்கக் கூடிய அளவில் சம்பவங்கள் நடக்கின்றன. அம்மாதிரிச் சம்பவங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு, கண்டக்டர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதால், இந்த மாதிரி பீக் அவரில் ஒவ்வொரு பஸ்ஸிலும் ஒரு போலீஸ்காரரை அனுப்புவதுபற்றி அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பஸ்ஸில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்கிற ஒருவர் அப்படித் தாக்குவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அப்படிச் சொல்லுவது மக்களைப்பற்றிக் குறை கூறுவதாகும். தவறிப்போய் டிக்கெட் வாங்காமல் இருக்கலாமே தவிர, வேண்டுமென்றே இருக்கமாட்டார்கள். அப்படி இருந்தாலும், கேட்கும்போது ஆட்சேபணை செய்யமாட்டார்கள். உடனே பணத்தைக் கொடுத்துவிடுவார்கள். ஏற்கனவே இருக்கிற நெருக்கடியோடு இன்னும் ஒரு போலீஸ்காரரையும் சேர்த்து அனுப்புவது சரியாகாது. நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும். மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் சுமுக உறவு நிலவும்படி செய்வார்கள் என்று கருதுகிறேன்.

*Motor cars*

*88. *Q.*—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Public Works be pleased to state the names of M.L.As. & M.L.Cs. to whom motor cars were allotted from the Tamil Nadu Government Quota during the financial years 1969-70 and 1970-71 (till date) ?

**மோட்டார் கார்கள்**

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

1969-1970, 1970-1971-ஆம் நிதி ஆண்டுகளில் (இன்று வரை) தமிழ்நாடு அரசு பங்கீட்டிலிருந்து எந்தெந்த சட்ட மன்ற, பேரவை உறுப்பினர்களுக்கு மோட்டார் கார்கள் ( Motor Cars ) ஒதுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பேரவை முன் விவர அறிக்கை ( † ) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

*Surplus lands*

*76. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state : 4-30 p.m.

(*a*) the number of acres of the surplus lands that have been so far taken over by the Government under the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 ; and

(*b*) the number of acres that have been so far handed over to the tenants by the Government ?

†Printed as Appendix II.